# ஞாநியின் பதில்கள்

எதிரொலியில் வெளியான சங்கராச்சாரி சின்னக்குத்தூசி பற்றிய கட்டுரை தொடர்பான துக்ளக் பத்திரிகையின் 15.04.1983 ஒரு வாசகர் கடிதமும் ஆசிரியர் சோ வின் விளக்கமும் வெளியிடப்பட்டிருந்தன.

இதில் கூறப்பட்டிருந்த பொய்களை மறுத்து 15.04.1983 அன்று, ஞாநி சோவுக்கு ஒரு கடிதம் எழுதியும் அதை துக்ளக்கில் இதுவரை அவர் வெளியிடவில்லை . எனவே கடித விவரம் இங்கே வெளியிடப்படுகிறது.)

டியர் மிஸ்டர் சோ,

காஞ்சி சங்கராச்சாரி , சின்னக்குத்தூசி சந்திப்பு பற்றி எதிரொலியில் வெளியான கட்டுரையை ஒட்டி எழுந்துள்ள ஒரு சர்ச்சை பற்றி 15.04. 1983 துக்ளக்கில் எழுதியுள்ளதைப் படித்தேன்.

இந்த விவகாரத்தில் நீங்கள் நடந்து கொண்ட விதம் மிகுந்த வருத்தம் அளிக்கிறது. ஜயேந்திரர் சந்திப்பு பற்றி 03.04.1983 ல் சின்னக்குத்தூசியும் 04.04.83 அன்று நானும் எதிரொலியில் எழுதிய கட்டுரையில் வெளிவந்த ஓரிரு நாட்கள் கழித்தும், புகைப்படக்காரரர் நண்பர் சுபா சுந்தரம் போன் செய்ததையும், அதையடுத்து நானும் சின்னக்குத்தூசியும் உங்களுக்கு போன் செய்து பேசியதையும், உங்களுக்கு நினைவுபடுத்தவும் உங்கள் வாசகர்களுக்கு தெரியப்படுத்தவும் விரும்புகிறேன்.

சுபா சுந்தரம் போனில் சோ பலமுறை என்னிடம் திரும்ப திரும்பக் கேட்டார். ஜயேந்திரர் ,தியாகராஜனிடமும் (சி.கு) ஞாநியிடமும் அப்படித்தான் சொன்னாரா என்று ரொம்ப அப்செட்டாகிக் கேட்டார். நீங்கள் அவரோடு பேசுங்கள் என்று சொன்னார். உடனே நான் போன் செய்து உங்களோடு பேசினேன். அப்போது ஒரு விசயத்தைத் தெளிவுபடுத்தினேன். ஜயேந்திரர் சொன்னமாதிரி நீங்கள் யாரும் தயார் செய்து அனுப்பக்கூடிய ஆளல்ல. உங்களோடு எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு . ஆனால், நானும் தியாகராஜனும் நிச்சயம் ஜயேந்திரர் சொன்னதை இப்போதும் நம்பவில்லை.வி நோ எபவுட் யுவர் இன்டிபென்டன்ட் ஆட்டிடியுட் என்று நான் சொன்னதற்கு நன்றி தெரிவித்தீர்கள்.

இப்போது நான் ஒரு தர்ம சங்கடமான நிலைமையில் இருக்கிறேன். ஜயேந்திரர் சொன்னதை சரியல்ல என்று நான் மறுத்தே ஆகவேண்டும். பட் ஐ ஹேவ் ரஸ்பெக்ட் பார் தட் இன்ஸ்ட்டிட்யூஷன் என்றீர்கள், என்ன செய்வது? உண்மைதான் முக்கியம் என்று நான் சொன்னேன். உங்களையும் தியாகராஜனையும் தவிர யாராவது அதை எழுதியிருந்தால் நான் அதை நம்பியிருக்கமாட்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள். தியாகராஜனிடமும் இது பற்றி பேசினீர்கள்.

இப்போது ஜயேந்திரர் அவர்கள் உங்களிடம் தெரிவித்த பொய்யை வெளியிட்டிருக்கிறீர்கள். அது அவருடைய ஸ்டேட்மென்ட், வெளியிடுவதும் முறைதான். அதைத் தொடர்ந்த உங்கள் கமெண்ட் வேறு!

நானும் தியாகராஜனும் பொய் சொல்லமாட்டோம் என்று நினைப்பதாக போனில் எங்களிடம் சொல்லிவிட்டு நாங்கள் பொய் சொல்லியிருப்பதாக அர்த்தம் வரும்படி பத்திரிகையில் எழுதியிருக்கிறீர்கள். உங்களுடைய ரெஸ்பெக்ட் பார் தட் இன்ஸ்ட்டிட்யூஷன் மேலோங்கியதில். உண்மை இரண்டாம் பட்சம் ஆகிவிட்டது.

ஜயேந்திரரைச் சந்தித்த பொழுது கட்டுரையை வெளியிடாமல் திடீரென்று கலாச்சார விழாவிற்குப் பிறகு வெளியிடுவானேன் என்று அவர் சார்பில் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இதற்கான பதிலை நாம் அன்றைக்கு போனில் பேசியபோது தியாகராஜன் உங்களிடம் தெரிவித்தார். சந்திப்பு முடிந்த ஓரிரு தினங்களில் தியாகராஜன் ஏஜென்சி விஷயமாக டூர் போய்விட்டார். ஒரு மாதகாலம் அவர் சென்னையில் இல்லை, அதனால்தான் அப்போதே வெளியிட முடியாமல் போயிற்று.

தவிர,ஜயேந்திரர் நடத்திய விழாவில் பங்கேற்பதாக அழைப்பிதழில் அறிவிக்கப்பட்ட அமைச்சர் காளிமுத்து செல்லவில்லை. இந்த நிலையில் அடுத்த நாளே சுவாமிகள் திடீரென்று மறுநாள் முதலமைச்சர் (அழைப்பிதழில் குறிப்பிடப்படாதவர்) வரப்போவதாக நிருபர்களிடம் அறிவித்தார். இப்படியாக சுவாமிகள் பாலிடிக்ஸ் செய்கிறார் என்ற நிலையில் அவர் எங்களோடு பேசியவற்றைஎம் .ஜி.ஆர். விழாவுக்கு வரும் நாளன்று வெளியிடுவது பொருத்தமென்பதனால் 03.04.83 அன்று சின்னக்குத்தூசியின் கட்டுரை வெளியிடப்பட்டது. நடந்தது அவ்வளவுதான்.

“பிரசுரத்துக்காக அல்லாமல் சில கருத்துக்களை எதிரொலியின் பிரதிநிதிகளிடம் பேசிக்கொண்டிருந்தாக சுவாமிகள் கூறினார்” என்று எழுதியிருக்கிறீர்கள். இது சுத்தப்பொய். பிரசுரிப்பதற்காக அல்ல என்று எதையும் சுவாமிகள் சொல்லவில்லை. அவருடைய தூதர் கார்ப்பரேஷன் பேங்க் சீனிவாசன் இதை அறிவார்.

குண்டுராவ் அருண்ஷோரியை சாப்பாட்டுக்கு அழைத்த போது சாப்பிடும் வேளையில் இருவரும் சம்பாஷித்ததை அருண்ஷோரி ‘சண்டே’ இதழில் வெளியிட்ட போது யாரும் ‘ப்ரைவேட் கான்வர்சேஷன்’ என்று எதிர்த்து பேசவில்லை . குண்டுராவ் மடாதிபதியாக இருந்தால் பேசி இருப்பார்களோ என்னவோ? அவ்வளவு ஏன்? ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளைக் காண திருப்பூர் கிருஷ்ணனும் வலம்புரிஜானும், பரணீதரனும், மணியனும் (!) போகிற வேளைகளில் யார் யாரோ பக்தர்கள் சுவாமிகளைச் சந்திக்க வருவதையும் அவர்கள் தங்கள் பிரச்சினைகளைக் கூறுவதையும் அவற்றுக்கு சுவாமிகள் கூறும் அருளாசிகளையும் அப்படியே கண்டு

மெய் சிலிர்த்து, நெகிழ்ந்து, நெஞ்சுருகி எழுதுகிற போது பக்தர்களின் ப்ரைவேட் பிரச்சனைகளை அச்சில் எழுதுவதை யாரும் விமர்சிப்பது இல்லை. சுவாமிகளை பாராட்டி அவரது இமேஜை பம்ப் வைத்துக் காற்றடித்து உயர்த்தும் போது வாய் மூடிக்கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு மெடர்னிடி டாக்டரும் அபத்தம் என்று உடனடியாகச் சொல்லக்கூடிய விதத்தில் பிறக்கும் போதே கைகளைக் கூப்பியவாறு பிறந்த குழந்தை ஜெயேந்திர சரஸ்வதிகள்' என்று உங்கள் சகோதர ஏடு எழுதுவதும் இமேஜுக்கு பம்ப் அடிக்கிற சமாசாரம் தான். இதைப்பற்றி உங்கள் பேனா எழுதாது. ஆனால் சுவாமிகளின் சுயரூபத்தை அம்பலப் படுத்தும் போது மட்டும் “பிரசுரத்துக்காக அல்லாமல்” என்று புதுக்கரடி விடப்படுகிறது.

03.04.83' (எதிரொலியில்) சின்னக்குத்தூசியின் கட்டுரை வெளியான மறுநாள் ஜயேந்திரரின் தூதர் சீனிவாசன் போன் செய்தார். கட்டுரையாளர் தியாகராஜனுடன் பேசினார். “ என்ன இப்படி திடீர்னு பப்ளிஷ் பண்ணடிட்டீங்க? “ என்று கேட்டார். பேசினதைத்தானே போட்டிருக்கிறது? பேசாததை போடவில்லை அல்லவா?” என்றார் தியாகராஜன். ஆமாம் பேசினது தான் வந்திருக்கு ; தப்பா எதுவும் இல்லை. மைல்டாதான் இருக்குன்னு பெரியவா சொன்னா. ஞாநியோட கட்டுரை எப்படி இருக்கும். அதுவும் மைல்டாதானே இருக்கும்” என்று சீனிவாசன் கேட்டார். எனக்குத் தெரியாது. நான் அதை இன்னும் படிக்கல என்று தியாகராஜன் சொன்னார். என் கட்டுரை வந்த பிறகு சீனிவாசன் தொடர்பே கொள்ளவில்லை.)

“வீணாக அவருடைய (ஜயேந்திரர்) பெயரை சர்ச்சைக்குரிய வகையில் இழுத்திருப்பது வருந்தத்தக்க விஷயம்” என்று தீர்ப்பு வேறு வழங்கி இருக்கிறீர்கள்.

நாங்கள் எங்கே அவரை சர்ச்சைக்கு இழுத்தோம்? |

கடந்த 6 மாத காலமாக'எதிரொலி' நிர்வாக இயக்குநர் ஆற்காடு வீராசாமியின் தம்பி தேவராஜனிடம் அவர் கணக்கு வைத்துள்ள கார்ப்பரேஷன் பேங்க் மேனேஜர் சீனிவாசன் ‘எதிரொலி' யில் ஜயேந்திரரைப் பற்றி விமர்சிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருந்தார். இதை தேவராஜன் சின்னக்குத்தூசியிடம் சொல்லிவிட்டு “தகவலுக்காக சொல்கிறேன்; நீங்கள் உங்கள் விருப்பப்படி எழுதுங்கள்” என்றார். முதல் நான்கு மாத காலம் இப்படி நடந்தது. பிறகு ஜயேந்திரரின் தூதர் சீனிவாசன் தன் அப்ரோச்சை மாற்றினார்.

சின்னக்குத்தூசி ஒரு தடவை வந்து பார்த்துப் பேசச் சொல்லி பெரியவர் கேட்டுண்டார். கொஞ்சம் அவரை கன்வின்ஸ் பண்ணி வரச் சொல்லுங்க என்று தேவராஜனிடம் சொல்ல ஆரம்பித்தார். இது 2 மாத காலம் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. சின்னக்குத்தூசி ஜெயேந்திரரை சந்திக்க ஆர்வங்காட்டவில்லை.

பிறகு தேவராஜன் ஒரு நாள் "சார் போய்ப்பார்த்து விட்டு வந்துடுங்க. ப்ரஷர் தாங்க முடியலே. நம்ம இருக்கற நிலையிலே இருக்கப் போறோம்; பார்க்கிறதுனாலே ஒண்ணும் தப்பில்லே" என்றார். இதன் பிறகே சின்னக்குத்தூசி ஒப்புக்கொண்டார்.

அதன்படி அவரை சீனிவாசன் அழைத்துச்சென்ற போதுதான் நான் தற்செயலாக உடன் சென்றேன். .

ஆக, சர்ச்சைக்கு ஜயேந்திரரிடம் இழுத்தது யார்? அவர்தான். தன்னைப் பற்றிய விமர்சனங்களை விரும்பாமல் விமர்சகரின் மனதை மாற்ற முயற்சி செய்தார்.

அப்படிப்பட்ட ஒரு துறவிதான், உங்களைப்பற்றிச் சொன்னதை இப்போது இல்லை என்று மறுக்கிறார். அவர் கூறிய விதம் கூட இன்னும் பசுமையாக எனக்கு நினைவிருக்கிறது.

மத்த மதங்களை ஏன் டி.கே.விமர்சனம் பண்றது இல்லே? இதைக் கேட்டா மழுப்பிடறீங்க. வீரமணியை சோ பேட்டி கண்டாரோ, இல்லியோ? அப்பவும் அவனால் இதுக்கு பதில் சொல்ல முடியலியே! இந்த இடத்தில் ஒரு கணம் நிறுத்திவிட்டு, முகத்தில் குதூகலப் புன்னகையோடு, ஜெயந்திரர் அடுத்து சொன்ன வாக்கியங்கள் இவைதான்; "நான்தான் சோவை அதுக்கு தயார் பண்ணி அனுப்பிச்சேன். என்னென்ன கேக்கணும்னு ரெடி பண்ணி அனுப்பிச்சேன். அவனால ஒண்ணுத்துக்கும் பதில் சொல்ல முடியலியே!"

இவ்வாறு தான் சொன்னதை இல்லை என்று, இப்போது மறுக்கிற சுவாமிகள் 03.04.83 முதல் இன்று வரை 'எதிரொலி'க்கு மறுப்பு அனுப்பவில்லை . தூதனுப்ப தெரிந்தவருக்கு, நேரடியாக மறுப்பனுப்பத் தெரியாதது ஏன்? உங்களைப் பயன்படுத்திக் கொள்வது ஏன்?

இப்படிப்பட்ட ஒரு மனிதர் , உங்களிடம் எங்கள் மீது குற்றச்சாட்டுகளை வேறு கூறியிருக்கிறார். நீங்கள் அதை அப்படியே வெளியிட்டு, அதன் அடிப்படையில் உங்கள் மேலான தீர்ப்புகளையும் வழங்குகிறீர்கள்!

அவர் சொல்லாதவற்றைச் சேர்த்தோமாம்! சொல்லிய சிலவற்றை ஆங்காங்கே விட்டுவிட்டோமாம்! சம்பாஷணையின் சில பகுதிகளை முற்றிலும் விட்டுவிட்டோமாம்!

இந்த மூன்றில் முதல் குற்றச் சாட்டை முழுமையாக மறுக்கிறேன். அவர் சொல்லாததை என்னென்னவென்று விவரமாக தெரிவிக்கட்டும்! அடுத்த இரண்டு குற்றங்களை செய்திருப்பது, உண்மைதான். ஒப்புக்கொள்ளுகிறேன். |

அவர் சொல்லிய சிலவற்றை ஆங்காங்கே விட்டுவிட்டது உண்மைதான். அவை என்ன தெரியுமா? மணியனைப்பற்றி அவர் கூறிய அசலான வாக்கியங்கள் தான். “அவனைப்பத்தி என்னண்ட கேட்காதீங்கோ. அவனுக்கு ஆத்மாவும் கிடயாது. ஆத்மார்த்தமும் கிடையாது. அவன் வியாபாரி. அவனுக்கும் எனக்கும் ஸ்நானப் பிராப்திகூட கிடையாது என்றார் ஜயேந்திரர். மணியனுக்கு ஜயேந்திரர் அங்கீகாரம் உள்ளதாகப் பலரும் கருதுவதை தவறென்று தெளிவுபடுத்த இதைப் பொதுமேடையிலும் சொல்லி விடுங்களேன் என்று நான் கேட்டபோது வெறும் சிரிப்பே பதில்! பொது மேடையில் கூற மறுத்தால் மணியனுக்கு ஜயேந்திரர் உடந்தை என்றே நான் கருத வேண்டி வரும் என்ற போது அதற்கும் ஒரு சிரிப்பு! பதில் கூற முடியாமல் நழுவுவது யார்? இந்தப் பகுதியை நாங்கள் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே வெளியிடவில்லைதான்.

இதே போல உண்மையான பிராமணன் யார்? என்ற சர்ச்சையை சின்னக்குத்தூசி எழுப்பியபோது ஜயேந்திரர் அருகில் இருந்த சீனிவாசனைக் காட்டி பேசியதை நாங்கள் வெளியிடவில்லை. இவன் மீசையும் கிராப்பும் இவனை யார் பிராமணன்னு ஒத்துப்பா? 20 வருஷம் முன்னாடி இந்த மாதிரி இருந்துண்டு என் முன்னால் வரமுடியுமோ? எல்லாம் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டா. அப்படித்தான் இருக்கும் என்றார் ஜயேந்திரர். உடனே சீனிவாசன் வெட்கத்தோடு நெளிந்தார். இந்தப் பகுதியை நாங்கள் வெளியிட வில்லை.

இதே போல வெளியிடாமல் விட்ட இன்னொரு பகுதி சின்னக்குத்தூசி தியாகராஜனை ஜயேந்திரர் எதிரொலி விசுவநாதன் என்பவரோடு குழப்பிக்கொண்டது பற்றியது.

தமிழ் எழுத்தாளர்களை ஜயேந்திரர் தர்ம பிரகாசில் சந்தித்த போது எதிரொலியில் இருந்து ஒருவர் வந்து தம்மிடம் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டதாக சொன்னார். எதிரொலின்னு விக்ரமன் மைக்ல சொன்னதும், எல்லோரும் ஒரு செகண்டு ஆச்சார்யமா பார்த்தா, என்று ஜயேந்திரர் எதிரொலிக்காரர் ஒருவர் தம்மிடம் ஆசிர்வாதம் வாங்கியது பற்றி பெருமிதத்தோடு சொன்னார்.

நீங்கதான் அவருன்னு நெனச்சேன். ஆனா அவரு வேற மாதிரியிருந்தாரு என்று சின்னக்குத்தூசியிடம் கேட்டார். நானும் அந்த நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். அப்படி எதிரொலி பத்திரிகைக்காரர் யாரும் அங்கே ஜயேந்திரர் காலில் விழவில்லை என்று சொன்னேன். ஜயேந்திரர் எதிரொலி விசுவநாதன் என்ற பெயரைச் சொன்னார். அவருக்கும் எதிரொலி பத்திரிகைக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது என்று விளக்கிய போது, ஜயேந்திரர் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. இதெல்லாம்தான் நாங்கள் வெளியிடாத பகுதிகள்.

வெளியிட்ட பகுதிகளில் உங்களைப் பற்றிச் சொன்னதை ஜயேந்திரர் தற்போது மறுத்திருக்கிறார்.

இன்னும் எதைஎதையெல்லாம் மறுத்திருக்கிறார் என்றும் நீங்கள் கேட்டிருந்தீர்களேயானால் நன்றாய் இருந்திருக்கும்.

1. எல்லோரையும் அவன் இவன் என்று பேசியதை மறுக்கிறாரா?
2. கருணாநிதி மீது ஏற்பட்ட கோபத்தால் அவர் உடல்நிலை பாதிக்கப்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்து வெற்றி பெற்றதாகச் சொன்னதை மறுக்கிறாரா?
3. மணியனைப் பற்றிச் சொன்னதை மறுக்கிறாரா?
4. தமிழ் அர்ச்சனை, அரிஜன அர்ச்சகர்கள் இரண்டையும் அவர் ஆதரித்தாலும் இவர் பக்தர்கள் அவற்றை எதிர்த்து கோர்ட்டுக்குப் போவதைத் தடுக்காதது ஏனென்று கேட்டபோது வெறுமே சிரித்தாரே? இதை மறுக்கிறாரா?
5. எல்லா மனிதர்களை பற்றியும் கவலைப்படாமல் மத அடிப்படையில் பிரிப்பது சரியல்ல என்று நான் சொன்ன போது எனக்கு எல்லா மனுசன் பத்தியும் கவலையில்லை! இந்துக்களைப் பற்றித்தான் கவலை என்றாரே ,அதை மறுக்கிறாரா?
6. திராவிடர் கழகம் இந்து மதத்தை விமர்சிப்பதால் முஸ்லிம்கள் பலம் பெறுகுவதாக கவலை தெரிவித்தாரே! அதை மறுக்கிறாரா?
7. முஸ்லீம்கள் எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலையில்லை என்று சொன்னதை மறுக்கிறாரா?
8. ஒரேயடியாக எதிரொலிக்கு சீனிவாசனை தூதனுப்பியதையும் சின்னக்குத்தூசியை சந்திக்க விரும்பியதையும் அதன்படியே அவரும் அவரோடு நானும் ஜயேந்திரரை வசந்த மண்டபத்தில் சந்தித்ததையும் அப்போது பேசியதையும் கடைசியில் எங்களுக்கு புரசை இலையில் கல்கண்டு கொடுத்ததையும் எல்லாவற்றையுமே கூட அப்படி எதுவுமே நடக்கவில்லை, அப்படி நான் யாரையும் பார்க்கவில்லை என்று மறுக்கிறாரா?

கேட்டுச்சொல்லுங்கள். ஜயேந்திரரிடம் மட்டுமல்ல. இந்தக் கடிதத்தில்

நான் குறிப்பிட்டுள்ள விஷயங்களைப் பற்றி சம்பந்தப்பட்ட எல்லாரிடமும் போய்க்கேளுங்கள். மனச்சாட்சியின் நெருடலை காவி உடை சாகடித்து விடலாம். ஆனாலும் சாதாரண மனிதர்களின் மனசாட்சிகள் அவ்வளவு சுலபத்தில் சாவதில்லை என்று நம்புகிறேன்.

நடக்காத ஒன்றை நடந்தது போல் கூறவேண்டிய அவசியமும் நடந்தவற்றை நடக்காதது போல் காட்டும் அவசியமும் கட்சி சார்புள்ள பத்திரிகைகளுக்கு வேண்டுமானால் ஏற்படலாம். ஜயேந்திரருக்கு அந்த மாதிரி ஏற்பட நியாயமில்லை என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள்.

எதிரொலி தி.மு.க. சார்புள்ள பத்திரிகைதான்.ஆனால் நான் , தி.மு.க, வையோ , தி.க.வையோ சார்ந்தவன் அல்ல. அவர்களுடன் எனக்கு சிலவற்றில் உடன்பாடும், சிலவற்றில் மாறுபாடும் உண்டு. நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனும் அல்ல. உங்கள் தூர்வாசரைப் போல் நானும் (துக்ளக் உட்பட) எல்லா இடங்களிலும் உண்மையைத் தேடுகிறேன். அவ்வளவுதான்.

நீங்கள் கட்சி சார்புள்ளவர். ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்பவர்.

ஜயேந்திரர் இந்து முன்னணியையும் ஆர்.எஸ்.எஸ்சையும் ஆதரிப்பவர். முஸ்லீம் லீக்கைப் போல் ஆர்.எஸ்.எஸ். சும் ஒரு கட்சிதான் என்பதே என் கருத்து. எனவே கட்சி சார்புள்ளவர்களுக்கு நடந்ததை நடக்காததாகவும், நடக்காததை நடந்ததாகவும் காட்டும் அவசியம் ஏற்படலாம் என்ற உங்களுடைய வியாக்கியானம் உங்கள் இருவருக்கே பொருந்தும். அந்தத் தியரியே எனக்கு உடன்பாடல்ல. (சரியான தத்துவம் உள்ள கட்சிக்கு அந்த அவசியமே வராது) அந்தத் தியரி எனக்குப் பொருந்தவும் இல்லை .

மனிதர்களை நேசிப்பதும், வாழ்க்கையில் நல்ல நெறிமுறைகளோடு வாழ்வதும், மனிதர்கள் எல்லாரும் சமமாய் வாழும் சுருதி சுத்தமான ஓர் உலகம் அமையகண்ட கனவை நனவாக்க உழைப்பதும், இதற்கெல்லாம் எதிரான சக்திகளோடு தொடர்ந்து யுத்தம் செய்வதும்தான் சரியென்று நான் நம்புகிறேன்.

அன்பு, ஆன்மீகம், நெறி, நல்லொழுக்கம் இவற்றை தயவு செய்து கடவுள், காவி, மதம் மடாதிபதிகளோடு இணைத்துக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இரண்டும் வெவ்வேறு . சத்தியத்தைத் தேடுபவர்களில் ஒருவராக , நீங்களும் ஒரு காலத்தில் இருந்தீர்கள் என்பதனால்தான் (தொடர்ந்து ஒரு வேளை இருக்கவும் கூடும் என்ற நம்பிக்கையினாலும் தான்) உங்களுக்கு இதைச் சொல்கிறேன்.

*அன்புள்ள ஞாநி 15.04.2003*

இந்தக் கடிதத்தை 01.05.1983 துக்ளக் இதழில் சோ வெளியிடாததன் வாயிலாக அவருடைய பத்திரிகை தர்மம் என்னவென்று தெரிந்துவிட்டது.

கடந்த மூன்று இதழ்களாக துக்ளக் பத்திரிகையில் துர்வாசர் என்பவர் தமிழில் மலிந்திருக்கிற தரங்கெட்ட எழுத்துக்களை (சரியாகவே) விமர்சித்து

எழுதி வருகிறார். இது பற்றி 01.05.1983 துக்ளக் இதழில் சோ வெளியிட்ட அறிவிப்பைப் பார்க்கலாம்.

குறிப்பு திரு.ஹேமா ஆனந்த தீர்த்தன் மீண்டும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதுவும் பிரசுரமாகும்!

வாசகர்களில் மிக மிகச்சிலர் ,எழுத்தாளர்கள் சிலரை ஆதரித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவையும் பிரசுரமாகும். இது பற்றிய எல்லா வாதங்களுக்கும் பதில் தர துக்ளக் தயாராக இருக்கிறது. இன்றைய பத்திரிகை உலகிலும் எழுத்துலகிலும் பலர் சேர்ந்து ஓட விட்டிருக்கும் சாக்கடையைச் சுத்தப்படுத்துவது என்ற முயற்சியில் அச்சாக்கடையில் இறங்குவது என்ற தீர்மானத்தை நன்றாக யோசித்தே செய்தோம். விடுவதாக இல்லை.

*- ஆ.ர்*

இவ்வாறு அந்த அறிவிப்பில் ‘சோ’ தெரிவித்திருக்கிறார். தூர்வாசர் கட்டுரைக்கு எத்தனை பேர் எழுதினாலும் கவலையில்லை ; சமாளிக்கலாம். ஏனென்றால் தூர்வாசர் சத்தியத்தின் பக்கம் நிற்பதுதான் அந்த பலத்தை தருகிறது.

ஆனால் ஜயேந்திரர் விவகாரம் பற்றி, சோ எழுதியதற்கு எதிராக ஒரு கடிதத்தைக்கூட அவரால் வெளியிட முடியவில்லை. ஏனென்றால் அவருடைய ஜயேந்திரருடைய பொய்கள் அப்போது அம்பலமாகி விடுகின்றன!

ஆபாசப்பத்திரிகைகள் ஆபாசமாக இயங்குவதில் ஆச்சரிய மில்லை. ஆனால், கருத்துலகில் ஆரோக்கியமான மாற்றங்களுக்காக உழைப்பதற்கு ஒரு இமேஜை மூலதனமாக்கிக் கொண்டு இயங்கும் துக்ளக் அந்தக் கருத்துலக நேர்மை இல்லாத பத்திரிகையாக இருப்பது ஒரு சாதாரண விஷயமல்ல. மக்களின் மூளையை இன்னொரு வடிவத்தில் திசை திருப்பும் வேலையாக இதுவும் ஆகிவிடுகிறது.

எல்லா பத்திரிகைகளையும் விமர்சித்து சாக்கடையை சுத்தப்படுத்தும் வேலையில் துர்வாசரை இறக்கியுள்ள துக்ளக் தன்னையும் சுய விமர்சனம் செய்து கொள்ளும் நேர்மை அதற்கு இருக்குமா என்பது இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நிச்சயம் சந்தேகத்துக்குரியதாகி விட்டது. அப்படிச் செய்தால் அதுவும் ஒரு கண்துடைப்பு வேலையாக மட்டுமே மேற்கொள்ளப்படலாம்.

இங்கேதான் ஜயேந்திரனிலிருந்து சோ வரை யாருக்கும் “வெட்கமில்லையே!

இந்த சூழ்நிலையில் உண்மையே உன் நிலை! விலை என்ன?

## நன்றி தீம்தரிகிட